**சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி**

மனு எண். எம்.சி.ஓ.பி. 97/2019

PW - 2

2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.எம்.மணிகண்டன், எம்.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | செல்வராஜ் |
| த.பெ. | மில்லர் |
| வயது | 57 |
| முகவரி | பொள்ளாச்சி |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| | |
|---|---|
| மசாஆ - 21 | எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்படுகிறது) |

**குறுக்கு விசாரணை**

சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வரவில்லை. இந்த வழக்கில் கண்ட 1ம் எதிர்மனுதாரர் எனது உறவினரா என்றால் இல்லை, தெரிந்தவரா என்றால் இல்லை. விபத்தை நேரடியாக பார்த்ததால் சாட்சியம்

அளிக்க வந்துள்ளேன். நான் தான் காவல் துறையில் புகார் கொடுத்தேனா என்றால் சரிதான். இறந்து போன கனகம் சென்ற வாகனத்தின் மீது மோதிய பேருந்தின் பதிவெண் விவரம் தெரியுமா என்றால் TN 39 N 0052 ஆகும். பேருந்தை நான் விபத்தின் போது பார்த்தேன். பேருந்து எங்கே செல்லக்கூடிய பேருந்து என கேட்டால் தாராபுரம் செல்லக்கூடிய பேருந்து நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் மனுதாரர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்திற்கு சென்று பேருந்து மோதியதாக பொய் புகார் அளித்தேன் என்றால் சரியல்ல, 1ம் மனுதாரரின் கவனக்குறைவுதான் காரணம் என்றால் சரியல்ல. மனுதாரர்கள் அதிக இழப்பீடு பெற வேண்டி அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி